DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.214/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பொன்னுசாமி | கிராமம் : | |
| தந்தை பெயர் : | வீரப்பத்திரன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் லாலாப்பேட்டையில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக்கம் கரூர் டெப்போவில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். 1, 2 எதிரிகளை தெரியும் பக்கத்து ஊரைச்சேர்ந்தவர்கள். அ.சா.1, அ.சா.2 இருவரையும் தெரியும். 13.10.2019 அன்று மாலை 03.45-04.00 மணியளவில் நான்பணியை முடித்துவிட்டு லாலாப்பேட்டை பஸ் ஸ்டாப்பில் நான் இறங்கும் போது எதிர்புறம் திருச்சி-திருப்பூர் செல்வதற்காக அரசுப்பேருந்து வநதது கும்பலாக இருந்தது. கண்டக்டர் பஸ் படியின் மேலே நின்றார். 1ம் எதிரி ஆனந்தக்குமார் படியில் நின்று கொண்டிருந்தார். 2ம் எதிரி தினேஷ் பஸ்ஸின் கிழே நின்றார்.

2. 2ம் எதிரி தினேஷ் நடத்துனரை சட்டையைபிடித்து இழுத்து அடித்துவிட்டார். அ.சா.1 நடத்துனர் பின் தலைவலிப்பதாக சொன்னார். பேருந்தில் இருந்த பயணிகளை மாற்றுப்பேருந்தில் ஏற்றி அனுப்பிவிட்டு லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, குளித்துலை அரசு மருத்துவமனைக்கு நடத்துனரை போக்குவரத்து கழக Staff செல்லப்பன் என்பவர் அழைத்துச்சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை:</u>**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 11:07:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.